பக்கங்கள் 18 + 07

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## பேராயர் மீது மைத்திரி சாடல்



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நான் ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதி 03

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 07 வெள்ளிக்கிழமை 21.06.2024 அதிர்வு 326



# ஜெய்சங்கர் வந்தமைக்கு எதிராக விமல் போர்க்கொடி

## அழுத்தங்களை வழங்கிக் காரியத்தைச் சாதிக்க இந்தியா முயற்சி என்றும் பகிரங்கக் குற்றச்சாட்டு

**"இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகித்து பாரதூரமான சில வேலைத் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள இந்தியா திட்டமிடுகின்றது என எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் இலங்கை விஜயம் தொடர்பில் அரசு தெளிவுபடுத்த வேண்டும்."**

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்தே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய வெளிவிவகார அமைச்சர் சில மணித்தியாலங்கள் தங்கியிருப்பதற்காக இலங்கை வந்துள்ளார்.

அவரின் விஜயம் தொடர்பில் எமக்குக் கிடைத்த தகவல்களுக்கமைய ஆட்கள் பதிவு திணைக்களத்தால் 03

# 13 ஐ அமுல்படுத்துவேன் எனக் கூறும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்காதீர்கள்

## மக்களிடம் பொன்சேகா எம்.பி. வேண்டுகோள்

## சஜித்தைச் சரமாரியாகப் போட்டுத் தாக்கினார்

"நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவேன் எனக் கூறும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வடக்கு மற்றும் தெற்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. தெரிவித்தார். 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# குளியாபிட்டிய மதீனா தேசிய பாடசாலைக்கு பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டம்

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 241 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், குருநாகல், குளியாபிட்டிய, சியம்பலாகஸ்கொட்டுவ மதீனா தேசிய பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.





# மாளிகைக்காடு பிரதேசத்துக்கு ஐ.தே.க. ஒருங்கிணைப்பாளர்!



( அஸ்ஹர் இப்றாஹிம்)

மாளிகைக்காடு பிரதேசத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் ஒருங்கிணைப்பாளராக எம்.ரீ.எம்.நௌஸாத் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அம்பாறை மாவட்டத்துக்கு உட்பட்ட மாளிகைக்காடு பிரதேசத்தினுடைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்பாளராக எம்.ரீ.எம்.நௌஸாத, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து நியமனத்தினைப் பெற்றுக் கொண்டார்.



# வத்திராயனில் எரிகாயத்துடன் மீட்கப்பட்ட நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் நேற்று (20) எரிந்த நிலையில் ஒருவர் பொது மக்களால் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்று இரவு வத்திராயன் பகுதியில் உள்ள தனது வீட்டில் தனியாக உறங்கியுள்ளார்.

இதன்போது எரிகாயங்களுடன் அலறியடித்துகொண்டு வீட்டில் இருந்து வெளியே ஓடிவந்துள்ளார்.

இதனை அவதானித்த பொது மக்கள் அந்த நபரை மீட்டு மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதித்த னர்.

பின்னர் மந்திகை ஊடாக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காரணம் தெரியவரவில்லை என்றும் முன்பகை காரணமாக பெற்றோல் குண்டு மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதா என்ற கோணத்தில் மருதங்கேணி பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

## ஜெய்சங்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்படவுள்ள அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய அடை யாள அட்டையைத் தயாரிப்பதற்கான ஒப்பந்தம், அதானியின் மின்சக்தி வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட 10 அல்லது 12 வேலைத்திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து இணக் கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதற் காகவே அவர் இங்கு விஜயம் மேற் கொண்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் இந்தியப் பிரதமரும் இங்கே விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சில விடயங்கள் தொடர்பில் எங்களுக்குத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

அதாவது இந்திய வெளிவிவகார அமைச்சர் சில மணித்தியாலங்களுக்கு தங்கியிருக்கவென இங்கு வந்தது ஏன்? இந்தியாவுடனான அந்த 12 வேலைத் திட்டங்களும் என்ன? இவற்றை அழுத்தம் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முன்னெ டுக்கும் முயற்சிகள் தொடர்பில் வெளி யாகும் தகவல்கள் தொடர்பில் அரச தரப்பினர் கூறுவது என்ன என்று இந்தச் சபையில் அறிந்துகொள்ள எதிர்பார்க் கின்றோம்.

இதில் உள்ள பாரதூரமான விடயம் உள்ளது. 10 அல்லது 12 வேலைத்திட் டங்களில் அடையாள அட்டை தொடர்பான வேலைத்திட்டம் பாரதூரமானதே. அதாவது ஆட்கள் பதிவு திணைக்க ளத்திடம் இருக்க வேண்டிய அனைத்து தகவல்களும் இந்திய நிறுவனத்திடம் சென்றுவிடும்.

அத்துடன் நாங்கள் பொருளாதார ரீதியில் நாங்கள் வீழ்ந்துள்ள நேரத்தில் எமது பக்கத்து நாடு எமது நாட்டுக்கு அழுத்தம் கொடுத்து கழுத்தை நெரித்து இவ்வாறான பிரச்சினைக்குரிய முயற்சிக ளை முன்னெடுப்பது பாரதூரமானதே. இதனால் இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சராவது பதில ளிக்க வேண்டும் என எதிர்பார்க் கின்றோம்." - என்றார்.

---

## பேராயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலேயே நட்டஈடு செலுத்தி விட்டேன். இருந்தபோதும், அந்தத் தாக்குதல் சம் பவத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்க ளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக பல்வேறு நாடுகள், பல்வேறு அமைப்புகளிடமிருந்து பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குப் பணம் செலுத்தப்பட்டது. அந்தப் பணத் துக்கு என்ன நடந்தது? அந்த விபரங் களைப் பேராயர் முன்வைக்க வேண்டும். ஆனால், அவ்வாறு கிடைத்த பணத்தில் ஒரு சதம் ரூபா கூட பாதிக்கப்பட்டவர் களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக் கையில்,

"ஒருவேளை இன்றிரவே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டால் ஜனாதிபதித் தேர்த லுக்கு எம்மால் வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாது. எனக்கு எதிராகத் தடை யுத்தரவும், இடைக்காலத் தடையுத்தரவும் இருப்பதால் வேட்புமனுத் தாக்கலை தேர்தல் ஆணைக்குழு ஏற்காது. அதன் காரணமாக, ஆதரவாளர்கள் பற்றியும் நாடு பற்றியும் நாட்டின் எதிர்காலம் பற்றியும் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் அமைப்பாளர்களின் எதிர் காலம் பற்றியும் சிந்தித்தே எனது தலை வர் பதவியை இராஜிநாமா செய்தேன்.

அவ்வாறு பதவியை இராஜிநாமா செய்திருக்காவிட்டால் கட்சியின் ஆதர வாளர்களுக்கும் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடவிருக்கும் வேட்பாளர்களுக்கு துரோ கம் இழைத்தவனாகிவிடுவோம். அத னால், வேட்பாளர்களுக்கு பாரதூரமான சிக்கலும் ஏற்படும். அதன் காரணமாகவே இராஜிநாமா செய்தேன்.

எனக்கு எதிராக இத்தனை தாக்குதல் களை மேற்கொள்கிறார்கள் என்றால் அதுதொடர்பில் ஒவ்வொருவரும் சிந்தித் துப் புரிந்துகொள்ள வேண்டும். எனக்கு எதிராக 400 வழக்குகள் இருப்பதால், உலக கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதிவாகியுள்ளேன் என்றே கருது கின்றேன்.

பேராயரின் தலைமைத்துவத்தில் எனக்கு எதிராக 400 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கும் கை, கால்களை இழந்தவர்களுக்கும் நட்டஈடு செலுத்துமாறு இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

ஆனால், நான் ஜனாதிபதியாக இருந்தபோது, பாதிக்கப்பட்ட சகலருக்கும் நட்டஈடு செலுத்தினேன். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் கத்தோலிக்க அமைப்புகள், உலக நாடு கள், பல்வேறு அமைப்புகள், இலங்கை யிலுள்ள உயர்மட்ட வியாபாரிகள் உள் ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து கர்தி னாலுக்கு பணம் கிடைத்தது. அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான விபரங்களை தயவு செய்து கர்தினால் முன்வைக்க வேண்டும். எனக்கு இவ்வளவு பணம் கிடைத்தது. அவற்றை இவ்வாறு பகிர்ந்தளித்து விட்டேன் என்று பேராயர் பெயர் விவரங் களை அறிவிக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு கிடைத்த பணத் தின் ஒரு சதம் ரூபா கூட பாதிப்படைந் தவர்களுக்கு வழங்கவில்லை. அவ்வாறு இருக்கையில், நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு அரச நிதியைப் பெற்றுக் கொடுத்தும் என்னை நட்டஈடு செலுத்து மாறு தெரிவித்து எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள். இதுவே தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையாகும்."

- என்றார்.



# பதுளை அரசியல் பிரமுகர்கள் சஜித்துடன் சங்கமம்

பதுளை மாவட்டத்தின் ஊவா பரணகம மற்றும் எல்ல பிரதேச சபைகளின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் பலர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண் டனர்.

இதன் பிரகாரம், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் எல்ல பிரதேச சபை யின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த நிமல் ரஞ்சித் வீரசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான சமந்த கபில ரத் நாயக்க, ஹேமாவதி குமாரிஹாமி மற் றும் பாரத ரணசிங்க ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண் டனர்.

அதேபோன்று எல்ல பிரதேச சபை யின் சுயேச்சை உறுப்பினராக இருந்த பி. சுரேஷ் போலவே, ஊவா பரணகம பிரதேச சபையின் உப தவிசாளர் ஆர்.டி.குணபால, உறுப்பினர் டி.எம். கருணாதாச மற்றும் ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் டி.ஐ.ரத்னபால ஆகி யோரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர்.

# நான்கு வயது மகனைத் தாக்கி வீடியோ எடுத்த தந்தை கைது!

(ராமு தனராஜா)

ஊவா பரணகம பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கம்பஹா தோட்டத்தில் தனது 4 வயது மகனைக் கொடூரமாகத் தாக்கும் காணொளியை வெளிநாட்டில் உள்ள தனது மனைவிக்கு அனுப்பி வைத்த குற்றச்சாட்டில் 26 வயதுடைய தந்தை நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று ஊவா பரணகம பொலிஸார் தெரிவித்தனர். .

கம்பஹா தோட்டம், மேல் பிரிவு, உடுபுஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் மனைவி கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றார் எனவும், கணவனுக்குத்



தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத் தாத காரணத்தால் குழந்தையை அடிக் கும் காட்சியை வீடியோவாகப் பதிவு செய்து இமோ தொழில்நுட்பம் மூலம் மனைவிக்கு அனுப்பி வைத்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அவர் அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார் எனவும், அதன்படி அவர் கைது செய் யப்பட்டார் எனவும் பொலிஸார் குறிப் பிட்டனர்.

தாக்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தையும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளது எனவும், அக் குழந்தையை வெலிமடை சட்ட வைத் திய அதிகாரியிடம் காண்பிக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வெலிமடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் ஊவா பர ணகம பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## 13 ஐ அமுல்படுத்துவேன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், பெயர் குறிப்பிடாது மறை முகமாக சஜித் பிரேமதாஸ மீது சரமா ரியாக அவர் சபையில் சொற்கணை களைத் தொடுத்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அப்பன் வீட்டுச் சொத்து அல்ல எனவும் அவர் சாடினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை யாற்றிய பொன்சேகா மேலும் கூறியவை வருமாறு:-

"நாடாளுமன்றத்தில் உரையாற்று வதற்கு எதிரணி பிரதம கொறடாவிடம் நேரம் கோரி இருந்தேன். எனக்கு நேரம் ஒதுக்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் பதில ளித்தார். அத்துடன், ஜனாதிபதித் தேர்த லின்போது சஜித்துக்குச் சார்பாக வேலை செய்வீர்களா எனவும் வினவினார். இறுதியில் எனக்கு நேரம் வழங்கவில்லை. எனினும், ஆளுங்கட்சியிடம் பேசி நேரத் தைப் பெற்றுக்கொண்டேன்.

நாம் மக்களுக்குச் சாராயம் கொடுத்து அரசியல் நடத்துவதில்லை. ஊழல், மோசடிகளில் ஈடுபடுவதும் கிடையாது. கொழும்பில் உள்ள கசினோக்காரர்களிடம் காசு வாங்கி பாடசாலைகளுக்கும், வைத் தியசாலைகளுக்கும் பொருட்களை வழங் குவதும் கிடையாது.

இப்படி செய்பவர்கள்தான் நாட்டின் தலைவராகப் பார்க்கின்றனர். கட்சித் தலைவர் என்பதற்காக ஆட்சி அதிகா ரத்தை வழங்கும் முடிவை எடுத்தால் அது நாட்டுக்கே பாதகமாக அமையும்.

தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக மகன்களை ஜனாதிபதி யாக்க முடியாது. இது தொடர்பில் மக்கள் சிந்தனையுடன் செயற்பட வேண்டும். பொருட்களைப் பகிர்பவர்களை அல்ல சிறந்த தலைவரையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

ஜனாதிபதி ஆகவேண்டும் என்ற கனவில் இருப்பவர்கள், வடக்குக்குச் செல்கின்றனர். 13 வழங்கப்படும் என உறுதியளிக்கின்றனர். தெற்கில் யார் எதிர்த்தாலும் 13 வழங்கப்படுமாம். அப்படி வழங்குவதற்கு 13 என்ன அப்பன் வீட்டுச் சொத்தா?

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, வடக்கும், தெற்கும் என அனைத்து பகுதியிலும் உள்ள மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும். தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் உள்ள வாக்குகளுக்காக இங்கி ருந்து சென்று உறுதியளிக்கின்றனர்.

வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள், இதைப் பெற்றுக்கொடுப்போம் எனக் கூறி நாடாளுமன்றம் வருகின்றனர். 13 ஐ வழங்குவோம் என வாக்குக் கேட்கும் வேட்பாளர்களுக்கு தெற்கு மக்களும், வடக்கு மக்களும் வாக்களிக்கக்கூடாது." – என்றார்.



# பிரான்ஸில் நடைபெற்று முடிந்த தமிழ்க்கலை மதிப்பளிப்பு விழா!

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகமும் பிரான்ஸ் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகமும் இணைந்த இரண்டாவது தமிழ்க்கலை மதிப்பளிப்பு விழா கார்ஜ் லே கோணேஸ் நகரில் அண்மையில் நடைபெற்றது.

இந்த மதிப்பளிப்பில் ஆற்றுகைத் தேர்வு நிறைவு செய்த 29 மாணவர்களுக்குக் கலைமணி விருதுகள் வழங்கப்பட்டன. அத்தோடு அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம், தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தோடு இணைந்து 25, 20, 10 ஆண்டுகால பணி நிறைவு செய்துள்ள தமிழ்க்கலை ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பும், 2019, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் தமிழ்க்கலைத் தேர்வில் பிரான்ஸ் மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பும் இடம்பெற்றன.

விருதுபெறும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் விருந்தினர்கள் இன்னிசையுடன் மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டு, அகவணக்கம் மற்றும் மங்கல விளக்கேற்றலுடன் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்துடன் இணைந்து கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக கலைப் பணியாற்றிவரும் மூன்று ஆசிரியர்கள் “கலைச்சுடர்” விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்தோடு 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிவரும் பத்து ஆசிரியர்களும் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிவரும் 02 ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

மேலும் 2019, 2021, 2022 ஆண்டுகளில் தமிழ்க் கலைத் தேர்வுகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகத்தால் சான்றிதழும் பதக்கமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

மதிப்பளிப்பைக் கனடாவிலிருந்து வருகைத் தந்திருந்த பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம் வழங்கினார்.

விழாவில் கார்ஜ் லே கோணேஸ் நகர பிதாக்கள் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, ஏனைய கட்டமைப்புகளின் உறுப்பினர்கள் தமிழ்க்கலை ஆசிரியர்கள், பொது மக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# செவிடன் காதில் சங்கு

இலங்கையில் பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை சுயாதீனமான, சகல விடயங்களையும் உள்ளடக்கிய, பக்கச்சார்பற்ற, வெளிப்படையான விதத்தில் முன்னெடுக்குமாறு இலங்கையை இணைத்தலைமை நாடுகள் தமது அறிக்கையில் கோரியிருக்கின்றன.

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 56ஆம் அமர்வில் இலங்கைத் தொடர்பான இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை நேற்று முன்தினம் முன்வைக்கப்பட்டது.

கனடா, மலாவி, மொண்டெனேகுரோ, வடக்கு மாசிடோனியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய இந்தக் குழுவின் அறிக்கையில் இலங்கை அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என வழமை போல வலியுறுத்தப்பட்டுள்ளது.

இணைத் தலைமை நாடுகளின் சார்பில் ஐக்கிய இராச்சியத்தின் மனித உரிமைகள் தூதுவர் ரீட்டா பிரெஞ்ச் இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில் ஆள்கள் பலவந்தமாகக் காணாமல்போகச் செய்யப்பட்டமை தொடர்பாபான விடயத்தில் பொறுப்புக்கூறல் நிலைநிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தும் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் சமீபத்திய அறிக்கைக்கு அவர் முதலில் நன்றி தெரிவித்திருக்கின்றார். அதேசமயம், இலங்கையில் பலவந்தமாகக் காணாமலாக்கப்படும் விடயங்கள் உட்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீண்டகாலமாக குற்றமிழைத்தோருக்கு தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் முறைமை தொடர்வதாக இணைத்தலைமை நாடுகள் தமது அறிக்கையில் விசனத்துடன் எடுத்துக்காட்டியுள்ளன.

“பலவந்தமாகக் காணாமல் போதல்களால் ஏற்படும் துன்பங்கள் மற்றும் அனைத்து சமூகங்கள் மீதும் அதன் தாக்கம் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் அதன் பரிந்துரைகளுடன் ஈடுபடுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.” - என்று குறிப்பிடும் இணைத்தலைமை நாடுகள் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் உட்பட இலங்கையினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும் அதன் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவது, அனைவருக்கும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது உட்பட முக்கியமானது என்று சுட்டிக் காட்டியுள்ளது.

“நீதித்துறை சுதந்திரம் மற்றும் நாட்டின் சட்ட நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாப்பதன் அவசியத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்” - என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து காணி விடுவிக்கப்பட்டதை வரவேற்கும் அதேவேளை, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பிலான பதற்றங்கள் மற்றும் தன்னிச்சையான கைதுகள், ஒழுங்கற்ற தேடுதல்கள் மற்றும் தடுப்புக்காவலின் போது மோசமான முறையில் நடத்தப்படல் போன்ற நிலைமைகள் குறித்து கவலை கொள்ள வேண்டியுள்ளது எனவும் இணைத் தலைமை நாடுகள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

இலங்கையில் யுத்தம் முடிந்த இந்த 15 வருடகாலமாக இந்த விடயங்களைத்தான் இணைத்தலைமை நாடுகள் உட்பட சர்வதேச சமூகம் இலங்கையிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. ஆனால் அவை எவையும் இலங்கையின் காதுகளில் ஏறவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்காக அவை அவமாகிப் போயின. இப்போதும் இந்த அறிக்கை மூலமான வலியுறுத்தலுக்கும் அதேகதிதான் நேரும் என்பதும் நிச்சயம்.

ஆயினும், அடுத்த செப்டம்பரில் - இன்னும் மூன்று மாதத்தில் - மீண்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபை கூடும்போது இலங்கை தொடர்பில் காட்டமான முடிவுகள் முன்னெடுக்கப்படுவதற்கான முன்னாயத்த மணியாக இணைத்தலைமைகளின் இந்த அறிக்கையைக் கருத முடியும்.

# உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி வாகரையில் உற்பத்தி ஊக்குவிப்பு






**(எம்.எம்.றம்ஸீன்)**

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் அதிக இயற்கை வளங்கள் காணப்படுகின்றன. சுற்றுச் சூழலைப் பாதுகாத்துக் கொண்டு உள்ளூர் வளங்களை அதி உச்சத்தில் பயன்படுத்தி நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள உள்ளூர் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று கோறளைப்பற்று வாகரை உதவி பிரதேச செயலாளர் அர்ச்சனா புவேந்திரன் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் நிகழ்வுகள் வாகரைப் பிரதேச செயலகத்தின் முன்றலில் இடம்பெற்றன.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தால் பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து சந்தைப்படுத்தும் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

இந்தப் பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை ஊக்குவிப்பு நிகழ்வுகளில் வாகரைப் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஏ. சுதர்ஷன், பொதுமக்கள், கிராம மட்டக் கூட்டுறவுச் சங்கங்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சூழல் சுற்றாடல் ஆர்வலர்கள் கூட்டுறவு அமைப்பின் உள்ளூர் உற்பத்தியாளர்கள், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் வெளிக்கள அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறுவர்கள் பாதுகாப்பு சேவை நிலை தொடர்பில் கருத்தமர்வு திருமலையில்




**(எஸ்.கீதபொன்கலன்)**

சிறுவர் அபிவிருத்தி நிதியத்தால், சிறுவர் பாதுகாப்பு சேவை நிலை தொடர்பான இறுதி ஆய்வறிக்கை கருத்தமர்வு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில், நேற்று முன்தினம் (19) திருகோணமலை யேகப் கடற்கரை சுற்றுலா விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வைச் சிறுவர் நிதியம், சிறுவர் அபிவிருத்தி நிதியம், அக்சன் யுனிட் லங்கா என்பன இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தன.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான, இளைஞர்கள் முன்னணியினால் “வினைத்திறனான சிறுவர் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்” என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த நிகழ்வு நடைபெற்றது.

அறிமுகம், சிறுவர் பாதுகாப்பு சேவை ஆய்வின் முன்வைப்புக்கள், ஆய்வின் முன்வைப்புக்களின் பரிந்துரைகளை ஆராய்தல் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில், சிறுவர் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் அதிகாரிகளிடம் மேற்கொண்ட பண்புசார் ஆய்வின் அடிப்படையில், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்தில்,சிறுவர் பாதுகாப்பு சேவை வழங்குவதில் தற்போது உள்ள முக்கியமான இடைவெளிகளை கண்டறிவதற்காக, முறையான தரவுகளைச் சேகரித்துப் பகுப்பாய்வு செய்தலும், பரிந்துரைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்தலும், சிறுவர் பாதுகாப்புசார் சேவைகளை வழங்கும் அதிகாரிகளுக்குச் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான இளைஞர்கள் முன்னணியால் தெளிவுபடுத்தும் நிகழ்வாக இந்த நிகழ்வு அமைந்தது.

இந்தக் கருத்தமர்வில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சிறுவர் சேவை அதிகாரிகள், சிறுவர் மகளிர் பிரிவு பொலிஸ் அலுவலர்கள், சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தர்கள், அக்சன் யுனிட் லங்கா உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# சர்வமத தலைவர்களுக்கு வாழ்த்துக் கூறிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அண்மையில் நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட சர்வமத தலைவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

வண. கலாநிதி சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் அல்-ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அருட்தந்தை கலாநிதி நிஷான் குரே பாதர் ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, இனங்களுக்கிடையில் சகவாழ்வு, இன, மத நல்லிணக்கத்தை மேற்கொள்ளவதில் 20 வருடங்களுக்கும் மேலாக அக்கறையுடனும், முன்மாதிரியுடனும் செயலாற்றி வரும் சர்வமத தலைவர்களுக்கு, மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் சர்வமத தலைவர்களுக்குப் புதிதாகக் கிடைத்த இந்தப் பதவியின் ஊடாக இலங்கையில் வாழக் கூடிய மூவின சமூக மக்களுக்கும் இடையில் இன, மத நல்லிணக்கம், சகவாழ்வை பலப்படுத்த இந்தப் பதவி நல்லதோர் சந்தர்ப்பமாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலை சண்முகா இந்து மகளிர் மாணவிகள் பளுதூக்கலில் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டிகள் அண்மையில் கண்டி, பிலிமத்தலாவ மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

இதில் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி பயிற்றுவிப்பாளர் கோ.உமா சுதனின் பயிற்றுவிப்பில் 16 வயதுக்கு உட்பட்ட பிரிவில் சி.ஹறினி முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும், 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் எஸ்.கிஷோந்திக்கா இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் வி.பிரஷா மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.



EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME


(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# முதலாவது ஆண்டு நினைவில் வானொலி மாமா மகேசன்!

## சிட்னியில் தமிழும் சைவமும் வளர்த்த பெருந்தகை!!

**(சிட்னியில் தமிழும் சைவமும் வளர்த்த "வானொலி மாமா" புகழ் நா. மகேசனின் முதலாவது ஆண்டு நினைவு நாளை (22) ஆகும்.)**

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**



சிறுவயதில் நாம் வானொலியின் ஊடாக கேட்டு இரசித்த குரல், ஆற்றலும் அறிவும் கொண்ட அரிய ஆசானாக விளங்கியவர். சிறுவயதிலேயே இலங்கை வானொலியில் அவரால் தொகுத்து வழங்கப்படும் "சிறுவர் நிகழ்ச்சி" எமமால் ரசித்து அனுபவித்த நிகழ்வு இன்னமும் பலருக்கு நினைவிருக்கும்.

இலங்கை வானொலியில் 'சிறுவர் மலர்' என்ற 45 நிமிட நேர நிகழ்ச்சி மூலம் 1965 முதல் தனது கலைப் பணியை ஆரம்பித்து, 1981 வரை விடாது நடத்தி வந்தார். இதனால் இவர் 'வானொலி மாமா' என சிறுவர்களாலும் பெரியவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டார். சிறுவர் மலர் நிகழ்ச்சியில், சிறுவர்களுக்கான நாடகங்களை எழுதியும், நெறிப்படுத்தியும் வந்த "வானொலி மாமா" புகழ் நா. மகேசன் 2023 ஜுன் 22 ஆம் திகதி சிட்னியில் காலமானார்.

இலங்கையின் சிறுவர் இலக்கிய வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்கும் மூத்த தலைமுறையினருக்கு இவரை நன்கு தெரியும். சமகாலத்தின் இளம் தலைமுறையினர் கூட இவரை நன்கு அறிந்திருப்பார்கள்.

இவரது இயற் பெயர் நாகலிங்கம் மகேசன். அக்கால பள்ளி மாணவர்கள் இவரை வானெலி மாமா என்றே அழைத்தனர். சிறந்த முறையில் சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்தி வந்தவர்.

பிள்ளைக் கவியரசு அழ. வள்ளியப்பா போன்ற அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்ட இவர் சிட்னியில் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தவர்.

### தமிழுக்கும் சைவத்துக்கும் சிட்னியில் ஆற்றிய அளப்பரிய பணி!

தமிழும் சைவமும் கண்ணென வாழ்ந்த வானொலி மாமா யாழ். மண் பெற்ற சிறந்த கல்விமான். சிட்னி சைவமன்றக் காவலர், கலைஞர், பழந்தமிழ் இலக்கிய விற்பன்னரும் கூட. ஆஸ்ரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடந்த பல ஆண்டுகள் அரிய நிகழ்சிகளை நடாத்திய அறிஞர் நா.மகேசன்.

வானொலி மாமா தமிழுக்கும், சிட்னி தமிழ் சமுகத்துக்கும் ஆற்றிய அளப்பரிய பணிக்கு எமது சமுகம் என்றும் கடமைப் பட்டிருக்கிறது. அவர் ஆற்றிய உயரிய சேவைகளால், எம்மவர் மனங்களில் என்றும் வாழ்வார். அத்துடன் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலில் தமிழ் மாணவர்களுக்காக இவர் ஆற்றிய பணி அளப்பரியது.

சிட்னி முருகன் கோயில், சைவப் பாடசாலைகள், தமிழ்க் கல்வி நிலையங்கள், ஆ ஸ்திரேலியா ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மூலம் பல சமூகப் பணியாற்றினார். சிட்னி சைவர்களுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

பல வருடங்களாக சைவர்களின் இறுதிக் கிரியைகளை திருமுறைகள் பாராயணம் செய்து இதற்காக புத்தகம் தயாரித்து வெளியிட்டார். இது உலகளாவிய ரீதியில் பாவிக்கப்படுகின்றது.

சிட்னியில் தமிழ்ச் சமூகத்துக்கு அவர் ஆற்றி வரும் சேவையைப் பாராட்டி நியூ சவுத் வேல்ஸ் அரசு 2006 இல் அவருக்கு "THE ACHIEVER" என்ற விருது வழங்கிக் கௌரவித்தது.

### சிறுவர் இலக்கியம் படைப்பு!

சிறுவர்களுக்கான நூல்கள் எழுத வேண்டுமென்று கனவு கூடக் கண்டவனல்ல எனக் கூறும் நா. மகேசன், ஆனல் இன்று தெய்வாதீனமாக அப்படியான ஒரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டவனாக இருக்கிறேன் என தனது "பாட்டும் கதையும்" நூலின் என்னுரையில் எழுதியுள்ளார்.

"வானொலி மாமா" நா. மகேசன் மேலும் கூறுகையில், நமது நாட்டில் சிறுவர்களுக்கான நூல்கள் வெளிவருவது மிகக் குறைவு. புத்தக வெளியீட்டுத் தாபனங்களும் சிறுவர் இலக்கியங்களில் அதிகம் அக்கறை எடுப்பதும் இல்லை. ஊக்குவிப்பதும் இல்லை. இந்த நிலையில் தனிப்பட்டவர்களின் முயற்சிகள் விருத்தியடைவதில்லை. நூல்களைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடுவது தனிப்பட்டவர்களுக்கு இயலாத கருமம். இருந்தாலும் இயன்ற மட்டில் சிறுவர் நூல்களைப் பயனுள்ளனவாகவும் சிறப்புடையனவாகவும் அமைக்க வேண்டும் என்பதே எனது ஆவல்.

முடிவான ஒரு கதையை இந்தப் பாடல்கள் கூறாவிட்டாலும் அவற்றின் சொல் நயமும் பொருள் நயமும் சிறுவர்களுக்குப் பயன் தருமென்பது என் நம்பிக்கை என்று தெரிவித்துள்ளார்.

### 'பாட்டும் கதையும்' சிறுவர் நூல்

நா. மகேசன் எழுதி வெளியிட்ட 'பாட்டும் கதையும்' என்னும் சிறுவர் நூல் சிறுவர் இலக்கியத் துறையில் நிலவும் தேவையை ஓரளவு நிறைவேற்ற முற்படுகிறது. இதில்

தொடர்ச்சி▼




# வட மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் குழுவினர் அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்கு

**(றிஸ்வான் சாலிஹ், சியாத்.எம்.இஸ்மாயில்)**

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலைக்கு வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட ஊழியர்கள் குழுவினர் சனிக்கிழமை (15) கள விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டப்ளியூ. எம். பாலித பண்டார தலைமையிலான ஊழியர்கள் குழாமினர், வைத்தியசாலையின் கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட ஏனைய பிரிவுகளையும் தற்போது இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வைத்திய சேவைகள் மற்றும் சாதனைகளையும் பார்வையிட்டனர்.




இந்த வைத்தியசாலைக்குப் புதிய வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட டாக்டர் ஐ.எம்.ஜவாஹிரையும் பாராட்டி கௌரவித்தனர்.

கள விஜயத்தின் ஞாபகார்த்தமாக வட மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வைத்திய அத்தியட்சகருக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

# முதலாவது ஆண்டு நினைவில் வானொலி மாமா மகேசன்!

**தொடர்ச்சி▲**

உள்ள பாட்டுகள் சிறுவர்களுக்கு மிகவும் ஏற்றவை. ஏனென்றால், இவை மிகவும் இலகுவான சொற்களால் ஆனவை. எளிமையான ஒசை அமைப்புக் கொண்டவை. அத்துடன் சுவையான கதைகளையும் சொல்வனவாய் உள்ளவை.

முதலில் உள்ள "எல்லாம் தெரிந்த எமநாதர்" ஒரு முசுப்பாத்தியான கதை. ஆணு அறிந்த அந்தோனியார் கதை, சிங்கள மக்களிடையே வழங்கும் மகதன முத்தா கதை என்பனவற்றை எமநாதரின் கதை நினைப்பூட்டுகிறது.

இராசா வீட்டு முற்றமதில் நனைந்த சீனி காய்ந்ததுவே... என்ற பழம் பாட்டில் சொல்லப்பட்டு வந்த வேடிக்கைக் கதை ஒன்றையே ஒரு புதிய பாட்டாக எங்கள் வாயில் மண்ணார என்ற தலைப்பில் பாடியுள்ளார் அன்பர் மகேசன்.

சும்மா தின்றன் பழம் என்ற பாட்டில், புத்திசாதுரியமுள்ள கெட்டிக்காரச் சிறுவனெருவனை நாம் சந்திக்கிறோம். ஆபத்தில் நண்பன், நல்லோர்க்கு அழகு, புள்ளிமானின் சுள்ளிக் கால்கள் முதலிய பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நீதி போதனை செய்கின்றது. இந்த நீதிகளெல்லாம் கதை வாயிலாகப் பாட்டுருவில் புகட்டப்படுவது, இதனைப் படிக்கும் சிறுவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

**வெளியிட்ட நூல்கள்**

குறளும் கதையும் (சிறுகதைகள் -1973), பாட்டும் கதையும் (கதைப்பாடல்கள் - 1974), முனியன் முரளிகானன் (குறுநாவல் - 1977), ஆத்திசூடி அறநெறிக் கதைகள் (1978), உடைந்த உள்ளம் (நாவல் - 2 பாகங்கள், 1979), ஆஸ்திரேலியாவில் ஆத்திசூடி (சிறுவர் கதைத்தொகுதி-1991), திருமுறையும் திருக்கதையும் (தேவார விளக்கக் கதைகள்- 1994), பாலர் நாடகங்கள் பத்து (1995),நாடகக் கவியரங்கு நாலு (சிறுவர் கவியரங்குத் தொகுதி - 1995), ஆறுமுகமான பொருள் (திருப்புகழ் விளக்கம் - 1995), திருவிழா (சிறுவர் சைவ சமய நாவல் - 1996), யு புடைஅிளந ழக ளுயளைய சுநடபைழைெ (சைவ சமய விளக்கம் - 1996), சிறுவர் பாடல்கள் (ஆஸ்திரேலியப் பின்னணியில் சிறுவர் பாடல்கள் - 1997), சைவசமய குரவர் போற்றி மாலை (போற்றித் துதி - 1998), சைவசமய இறுதிச் சடங்கு - நடைமுறையும் விளக்கமும் (1998), சிட்னி முருகன் பிள்ளைத் தமிழ் (பிரபந்த நூல் - 1999), ஔவை வந்தால்.. (மாணவர் மேடை நாடகங்கள் - 2001) ஆகியன நா. மகேசன் எழுதி வெளியிட்ட நூல்களாகும்.



# மன்னார் மாவட்டப் பயனாளிகளுக்கு நீண்ட காலப் பயிர்கள் வழங்கி வைப்பு





**(மன்னார்)**

'நீண்ட கால பயிர் உற்பத்தி ஊடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்' எனும் திட்டத்தின் கீழ் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயம் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் 60 பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்களுக்குத் தேவையான மா, தென்னை, மற்றும் பப்பாசி உள்ளடங்களாக நீண்ட கால பயிர்களை வழங்கி வருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் பேசாலை, வேப்பங்குளம் மற்றும் கரம்பைக் குளம் ஆகிய 3 கிராமங்களில் இருந்து 60 பயனாளிகள் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டு இவை வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை (18) இந்த நிகழ்வு கரம்பை குளம் கிராமத்தில் இடம் பெற்றது.

கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினராக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் கலந்து கொண்டார்.

மேலும் தேசிய நிலையத்தில் இருந்து திட்டத்தின் பொறுப்பாளர்களான சோபா மற்றும் பிரசாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர். முருங்கன் மெதடிஸ்த போதகரும் கலந்து கொண்டார்.

இந்தத் திட்டமானது ஜேர்மன் நாட்டில் உள்ள மிசிரியோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் கொழும்பு தேசிய நிலையத்தின் ஊடாக மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தால் மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.





# பாணந்துறையில் நாய்களுடன் வேடிக்கை வினோத நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சிலோன் கெனல் கிளப் அதன் 125 வருட பூர்த்தியை முன்னிட்டு ஒழுங்கு செய்திருந்த வாய் பேசா பிராணியான நாய்களுடன் சங்கமம் நிகழ்வு சிலோன் கெனல் கிளப் நிறுவனத்தின் அனு சரணையில் பாணந்துறை கடற்கரை யில் இடம்பெற்றது.

இலங்கையில் வித்தியாசமான நாய்களை வளர்ப்போர் பலர் தமது நாய்களுடன் வருகை தந்திருந்தனர்.

வித்தியாசமான முறையிலும் வினோதமான முறையிலும் பலவித மான விளையாட்டு நிகழ்வுகளிலும் சாகச நிகழ்வுகளிலும் நாய்கள் கலந்து கொண்டு பார்வையாளர்களை பரவசத் தில் ஆழ்த்தின.

இதன்போது வெற்றியீட்டிய நாய் உரிமையாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. நாய்களுக்கான தடுப் பூசிகளும் வழங்கப்பட்டன.






# சிறுவர், பெண்கள் வன்கொடுமை தடுப்புப் பணியகங்கள் திறப்பு









**(பாறுக் ஷிஹான்)**

சிறுவர் மற்றும் பெண்கள் மீதான வன்கொடுமை உள்ளிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம், நிந்தவூர், மற்றும் சாய்ந்தமருது பிர தேசங்களில் பொலிஸ் நிலையங்க ளில் சிறுவர் மற்றும் பெண்கள் வன் கொடுமை தடுப்பு பணியகம் உத்தி யோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட் டுள்ளன.

நேற்று முன்தினம் (19) அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது, நிந்தவூர், இறக்காமம் பொலிஸ் நிலையங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் வன்கொடுமை தடுப்பு பணியகங்களைக் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கலாநிதி சட்டத் தரணி அஜித் ரோகண பிரதம விருந் தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் அரசின் விசேட திட் டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 3 பொலிஸ் நிலையங்களில் இந்தப் பணியகங்கள் அமைக்கப்பட் டுள்ளன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், உட்பட சர்வமத தலைவர்கள், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

# ஒரு லட்சம் மரம் நடும் திட்டம் காத்தான்குடியில் ஆரம்பிப்பு



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

காத்தான்குடியில் ஒரு லட்சம் மரம் நடும் திட்டத்தின் கீழ் கடந்த செவ் வாய்க்கிழமை காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு முன்பாக மரம் நடுகை நிகழ்வு இடம்பெற் றது.

கோ கிறீன் பசுமை வேலைத் திட்டத் தின் கீழ் இந்த மரம் நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

இந்த திட்டத்தின் கீழ் காத்தான் குடியில் பல இடங்களிலும் மரம் நடுகை இடம்பெற்று வருகிறது.

ஆரம்ப நிகழ்வில் காத்தான்குடி மத் திய கல்லூரி அதிபர் நிஹால் அஹமட், கோ கிறீன் திட்டத்தின் ஏற்பாட்டாளர் களான மாஹிர், டாக்டர் நிஹாஜ், லாபீர் ஆசிரியர், மௌலவி முஸ்தபா செரீப் உட்பட காத்தான்குடி மத்திய கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



## நுரைச்சோலை அரபா நகர் கொய்யாவாடி வித்தி.

# பழைய மாணவர் கிரிக்கெட் சுற்றில் 2018 ஆம் ஆண்டு அணி சம்பியன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நுரைச்சோலை அரபா நகர் கொய்யாவாடி முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் 2007 ஆம் ஆண்டு அணியை 11 ஓட்டங்களால் வீழ்த்திய 2018 ஆம் ஆண்டு அணி நடப்பாண்டின் சம்பியனைத் தனதாக்கிக் கொண்டது.

கொய்யாவாடி முஸ்லீம் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சபை, பிரஜா பொலிஸ் அமைப்பு, பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர் குழாம் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தச் சுற்றுப் போட்டியின் மொத்தம் 16 வருட அணிகள் பங்கேற்றிருந்தன.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்ற இந்தப் போட்டித் தொடரில் 16 அணிகளும் 4 அணிகள் வீதம் 4 குழுக்கலாகப் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் ஆட்டங்களாக இடம்பெற்றனர்.

பின்னர் ஒரு குழுவிலிருந்த முதலிடம் பிடிக்கும் 4 அணிகள் அரையிறுதிப் போட்டியில் பங்கேற்று அதிலிருந்து 2 அணிகள் இறுதிப் போட்டியில் பலப் பரீட்சை நடத்தும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.



அதற்கமைய குழு நிலை மற்றும் அரையிறுதிப் போட்டிகளில் இலகு வெற்றிகளைப் பதிவு செய்த 2007 ஆம் வருட அணியும் 2018 ஆம் வருட அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.

இதற்கமைய இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற 2018 ஆம் ஆண்டு அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பின்னர் 60 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த 2007 ஆம் ஆண்டு அணியினர் 5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் பெற்றுக் கொண்டமையால் 2018ஆம் ஆண்டு அணியினர் 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

# பாலமுனை கிராமத்தில் சகவாழ்வு சங்க ஆரம்பம்



(எம்.எ.நவாஸ்)

நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவால் கிராமங்கள் தோறும் சகவாழ்வுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.றி.எம். இர்பான் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் கு.நஹீஜா முஷாபிர் ஆலோசனையில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம். நிஸான் நெறிப்படுத்தலில் பாலமுனை, திராய்க்கேணி பிரிவுக்கான சகவாழ்வுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராமசேவகர் எம்.எஸ்.எம். இப்றாஹிம் மற்றும் கிராமத்தின் முஸ்லிம் மற்றும் தமிழ் சகோதரர்கள் பங்கேற்றனர்.






# மாஸ்டர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கங்கள் வென்ற உடற்கல்வி ஆசிரியர்!

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தங்கப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்ட கல்முனை அல்-மிஸ்பாஹ் பாடசாலையின் சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் றிஸ்மி மஜீத் மீண்டும் நடைபெற்று முடிந்த 37 ஆவது வருடத்த மாஸ்டர் (திறந்த) சம்பியன்ஸிப் - 2024 போட்டியில் 100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் உயரம் பாய்தலில் வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் மாஸ்டர் தடகள சாம்பியன்ஷிப் - 2023 போட்டியிலும் இவர் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் பங்குபற்றி மூன்றாமிடம் பெற்று வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

கடந்த வருடம் அனுராதபுர பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பங்குயிருந்ததோடு, இவர் மிகச் சிறப்பாகத் தனது திறமையை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரை பாராட்டி பலரும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்து வரும் நிலையில் கல்முனை அல் – மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்துக்கு கடந்த வாரம் வருகை தந்த இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ரொஷான் மஹானாமவால், இவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், விளையாட்டு ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்களாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

# பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி உள சுகாதாரம் தொடர்பான கூட்டம்




**(சர்ஜூன் லாபீர்)**

சம்மாந்துறை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உள சுகாதார குழுக் கூட்டம் நேற்று (20) உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு, பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமை மீறல், உளவளசார் நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்மந்தமாக துறைசார் பிரதிநிதிகளிடம் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் டாக்டர் கசூன் கடுவல, நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளீர், சமூக சேவை பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி ஏ.யூ.பசீல், உளவளத் துணை உத்தியோகத்தர் கே.தயாளினி, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களான எம்.ஐ.எம். ஹரீமா, ஏ.ஜே.குறைசா, பொலிஸ் உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், பொது சுகாதார அதிகாரி, வலயக் கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இரட்டை குழந்தை பெற்றெடுத்த குடும்பத்துக்கு வாழ்வாதார உதவிக்கான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது.

# தமிழக சட்டப்பேரவையில் அமைதியின்மை: அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் வெளியேற்றம்





கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் தொடர்பாக சட்டப்பேரவையில் அ.தி.மு.க, பா.ம.க, பா.ஜ.க. ஆகிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று அமளியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் அனைவரும் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் வழங்கிய அ.தி.மு.கவினர், இன்று கறுப்புசட்டையில் சட்டப்பேரவைக்குச் சென்றனர்.

தொடர்ந்து சபாநாயகர் வந்ததும் சட்டப்பேரவை தொடங்கிய நிலையில், அ.தி.மு.க, பா.ம.க, பா.ஜ.க. ஆகிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபடத் தொடங்கினர். சபாநாயகர் அப்பாவு இருக்கையை முற்றுகையிட்டு உறுப்பினர்கள் குழப்பத்தில் ஈடுபட்டனர்.

சட்டப்பேரவை நிகழ்வுகளை ஒத்திவைத்துவிட்டு கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என அவர்கள் குரல் எழுப்பினர். அத்துடன், 'பதவி விலகுங்கள் ஸ்டாலின்' என்ற பதாகையை காண்பித்தவாறு அவர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது கேள்வி நேரம் முடிந்ததும் விவாதிக்கப்படும் என்று சபாநாயகர் அப்பாவு விளக்கம் அளித்தார். ஆனால், அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் உறுப்பினர்கள் போராட்டம் செய்தனர். இதையடுத்து சபாநாயகர் அவர்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தார்.

அதன்படி, அவைக் காவலர்கள் அ.தி.மு.க. எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்ட உறுப்பினர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர்.

அப்போது, அவை முன்னவர் என்ற முறையில் பேசிய அமைச்சர் துரைமுருகன்,

“எதிர்க்கட்சிகள் இன்றைக்கு விரும்பத்தகாத நிகழ்வை உருவாக்கியுள்ளன. நடக்கவிருக்கும் நிகழ்வுகள் குறித்து வாதாடுவதற்கு எதிர்க்கட்சி தலைவருக்கு உரிமை உண்டு. ஆனால், சட்டமன்ற விதிகளுக்கு உட்பட்டு தான் அதனை செய்ய முடியும். கேள்வி நேரம் தான் முதல் பணி. கேள்வி நேரம் மிக முக்கியமானது. அதனால், சட்டத்தில் கேள்வி நேரத்தின் போது குற்றச்சாட்டுகள் கூறக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதெல்லாம் எதிர்க்கட்சி தலைவருக்கு தெரியும். அப்படி இருந்தும் அவர் இப்படி நடந்து கொண்டது ஆச்சர்யமாக உள்ளது. கேள்வி நேரம் முடிந்த பின்பே விவாதங்கள் செய்ய வேண்டும். இதை சொல்வதை கேட்க கூட அவர்கள் தயாராகவில்லை. அதனால் நிகழ்ச்சியில் பங்கேற்க கூடாது என வேண்டுமென்றே இப்படி செய்துள்ளார்கள். இது தவறு. சபையில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்ததற்காக இந்த மன்றம் வருந்துகிறது. தவிர்க்க முடியாத காரணத்தால் தான் சபாநாயகர் வலுக்கட்டாயமாக வெளியேற்ற உத்தரவிட்டார்.” – என்றார்.

# கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய உயிரிழப்பு 52 ஆக அதிகரிப்பு



கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் குடித்து உடல்நலம் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோர் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்துள்ளது.

சிகிச்சை பெற்று வருவோரில் 30 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக இன்று காலை மாவட்ட ஆட்சியர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மாலை நிலவரப்படி, உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்தது. இதில் 3 பேர் பெண்கள். உயிரிழந்தவர்களில் 31 பேரின் உடல்கள் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிலையில் இன்று காலை 11 மணி நிலவரப்படி உயிரிழந்தோர் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்துள்ளது.




# இந்திய – இலங்கை சர்வதேச கடல் எல்லையில் பாதுகாப்பு இணை அமைச்சர் நேரடியாக ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி அரிச்சல் முனையில் நடைபெற்ற யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மத்திய பாதுகாப்பு துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத் இந்திய – இலங்கை சர்வதேச கடல் எல்லை பகுதியில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கை குறித்து ஆய்வு செய்தார். இந்திய எல்லையில் உள்ள தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினார்.

இந்தியா முழுவதும் இன்று சர்வதேச யோகா தினம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடி அரிச்சல் முனை பகுதியில் மத்திய பாதுகாப்புத் துறை சார்பில் யோகா பயிற்சி இன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நேற்று சிறிய ரக ராணுவ விமான மூலம் ஐ.என்.எஸ் பருந்து கடற்படை தளத்திற்கு வந்த மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் சஞ்சீவ் சீத் இந்திய கடற்படை மற்றும் கடலோர கடற்படை காவல் படை முகாம்களை ஆய்வு செய்த பின்னர் இராமேஸ்வரம் கடல் பகுதியை ஆய்வு செய்தார். பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் குறித்து பாதுகாப்பு துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதையடுத்து இன்று காலை இராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோயில் சாமி தரிசனம் செய்த மத்திய இணை அமைச்சர் பின்னர் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரையில் நடைபெற்ற யோகா தினத்தில் கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்தார்.

அதனை தொடர்ந்து தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து இந்திய கடலோர காவல் படைக்கு சொந்தமான ஹோவர் கிராஃப்ட் கப்பலில் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை வரை சென்று கடலுக்கு மத்தியில் அமைந்துள்ள மணல் திட்டில் இறங்கினார்.

பின்னர் சர்வதேச கடல் எல்லையில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, கண்காணிப்புகள் குறித்தும் ஆய்வு செய்தமையுடன் கண்காணிப்பு பணிகள் குறித்து பாதுகாப்பு அதிகாரியிடம் கேட்டறிந்தார்.

இதனையடுத்து இந்திய எல்லையில் வைக்கப்பட்டிருந்த இந்தியா என்ற பெயர் பலகைக்கு அருகே நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார். எல்லையில் உள்ள தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தினார்.

பின்னர் மீண்டும் ஹோவர் கிராப்ட் ரோந்து கப்பல் மூலம் தனுஷ்கோடி வந்து சாலை மார்க்கமாக ஐ.என்.எஸ். பருந்து கடற்படை தளத்திற்கு சென்றார்.

முன்னதாக முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல் கலாம் நினைவகத்திற்கு சென்று அவரது சமாதியில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் ஆய்வின் போது அவருடன் இந்திய கடலோர காவல்படை மண்டபம் முகாமின் நிலைய கமாண்டர் வினைக்குமார் மற்றும் கடற்படை தளத்தின் நிலையை கமாண்டர் கேப்டன் அஸ்வின் மேனன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

# கள்ளுக் கடைகளைத் திறந்தால் பூரண மதுவிலக்கு சாத்தியமாம்!

சென்னை, ஜூன் 21

தமிழ்நாட்டில் கள்ளுக்கடைகளைத் திறந்தால் பூரண மதுவிலக்கு சாத்தியம் எனத் தெரிவித்து கோவையில் அண்ணாமலை பேட்டியளித்திருக்கின்றார்.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கோவை ஈஷா யோகா மையத்தில் தமிழக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை யோகா பயிற்சியில் ஈடுபட்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியதாவது:

”கள்ளச்சாரய சம்பவம் மிகுந்த



வேதனையளிக்கிறது. கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு நாம் தீர்வு காணவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். யோகா மூலம் குடி பழக்கத்திலிருந்து பலரை மீட்டெடுக்கலாம். எனது மன அழுத்தத்திலிருந்து மீண்டு எழ எனக்கு யோகா முக்கியமாக இருக்கிறது.

தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டு வர முயன்றால் அது பிரச்சனையில் முடியும். கொஞ்சம் கொஞ்சமாக மதுக்கடைகள் மூடப்பட வேண்டும். கள்ளுக்கடைகள் திறந்தால் பூரண மதுவிலக்கு சாத்தியமே. கள்ளுக் கடை திறந்தாலும் அரசு கண்காணிப்பில் இருக்க வேண்டும். அதன் மூலம் அரசுக்கு வருவாய் கிடைத்தால் நல்லதுதான்.” –இவ்வாறு அவர் கூறினார்.

# விண்வெளி ஆய்வு மையத்துக்குச் செல்ல இந்திய விண்வெளி வீரர்களுக்கு பயிற்சி

## நாசாவின் தலைவர் அறிவிப்பு



வாஷிங்டன்,

விண்வெளியில் இயங்கி வரும் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு செல்வதற்கு இந்திய விண்வெளி வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் தலைவர் பில் நெல்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் “மனித குலத்தின் நலனுக்காக முக்கியமான மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தில் அமெரிக்கா மற்றும் இந்தியா முன்முயற்சியை நாசா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. விண்வெளியில் இரு நாடுகளின் ஒத்துழைப்பை நாங்கள் ஒன்றாக விரிவுபடுத்துகிறோம். அதன் ஒரு பகுதியாக சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு செல்ல இஸ்ரோ விண்வெளி வீரர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளோம்” என தெரிவித்துள்ளார்.

# பிராண்டட்’ பொருள்களின் ‘டூப்ளிகேட்களை’ அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லாதீர்கள்!

அமெரிக்காவுக்குச் செல்வோர், பிராண்டட் பொருள்களின் போலிகள் என்று தெரியாமலோ தெரிந்தோ வாங்கி வைத்திருந்தால், அவற்றை கொண்டு செல்லாதீர்கள். சென்றால், அவை சுங்கத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா செல்கிறோம் என்று புமா, அடிடாஸ், நைக் போன்ற உயர்தர பிராண்டட் பொருள்களை தேடித் தேடி வாங்குபவர்கள், அதற்குரிய இடங்களில் வாங்குங்கள். ஒருவேளை பேரம் பேசி அடிமாட்டு விலைக்கு வாங்கி சபாஷ் போட்டுக் கொள்ள முயன்றால், அது போலியானதாக இருக்கலாம், அமெரிக்கா செல்லும்போது அவை பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிலிருந்து அண்மைக் காலத்தில், அமெரிக்கா சென்ற மாணவர்கள், சுற்றுலா பயணிகள் உள்ளிட்டோரிடமிருந்து, விமான நிலையத்தில், மிக விலைகொடுத்து வாங்கிய பிராண்டட் என்று நம்பிய போலி பொருள்களை அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையின் கண்காணிப்புப் பிரிவு, பறிமுதல் செய்துள்ளது.

அதிலும், பறிமுதல் செய்யப்படும் பொருள்கள், இந்தியப் பயணிகளின் கண் முன்னே அழிக்கப்படுகின்றன எனவும், துணிகளாக இருந்தால் கிழிக்கப்பட்டு குப்பையில் வீசப்படுகின்றன எனவும் கூறப்படுகிறது.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு விதிகள் சொல்வது என்னவென்றால் –

தனிநபர் ஒருவர், சட்டை, கைப்பை,



காலணி என அனைத்து பயன்பாட்டுப் பொருள்களிலும் பிராண்டட் பெயரில் இருக்கும்தலா ஒரு போலியான பொருளை எடுத்துச் செல்ல அனுமதிக்கலாம். அதுவும் தனிநபரின் பயன்பாட்டுக்காக மட்டுமே. விற்பனைக்கு அல்ல. ஒன்று அதிகமாக இருந்தாலும் அவை பறிமுதல் செய்யப்பட வேண்டும். அதுவும், அந்த தனி நபர், இந்த ஒரு போலி பொருள் எனும் வாய்ப்பை 30 நாள்களுக்கு ஒரு முறை மட்டுமே பெற முடியும்.

ஒரு பதிவு செய்யப்பட்ட பிராண்டட் பொருளின் பெயரில் அல்லது சின்னம் கொண்ட போலி பொருள்கள் அமெரிக்காவுக்குள் நுழைவது தவறு என்கிறது விதிமுறைகள்.

இதுபோல, பிராண்டட் பொருள்களின் பெயரில் இருக்கும் பயன்பாட்டுப் பொருள்களை, அமெரிக்காவில் பயன்படுத்தவோ அல்லது அமெரிக்காவில் இருக்கும் உறவினர்களுக்காகவோ வாங்கிச் செல்லும்போதுதான் இந்தியர்கள் பெரும்பாலும் மிக மோசமாக நடத்தப்படுகின்றனர் எனவும், இது போலியான பொருள்களை கடத்துவதற்குச் சமம் என்றும், அவர்கள் மீது குற்ற வழக்குப் பதிவு செய்யப்படும் அபாயம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இல்லையென்றால், அவை அனைத்தையும் அவர்களது குப்பைத் தொட்டியில் போடுவதைத்தான் நம்மால் பார்க்க முடியும்.

எனவே, பிராண்டட் பொருள்களை, பயன்படுத்தாமல், கவர் கூட பிரிக்காமல், அமெரிக்காவில் பயன்படுத்த வேண்டும் என்று வாங்கிச் செல்லும்போது அது உண்மையான பிராண்டட் பொருள் தானா என்பதை கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். அது மட்டுமல்ல ஒன்றுக்கும் மேற்பட்ட ஒரே வகையான பயன்பாட்டுப் பொருள்களை இப்படி கொண்டு செல்லும்போது மிகவும் எச்சரிக்கை வேண்டும்.

இவ்வாறு விவரம் தெரியாமல், அமெரிக்கா செல்லும் இந்தியர்கள் பலரும் பல ஆயிரம் முதல் பல லட்சம் மதிப்புள்ள பொருள்களை போலியானவை என்று கண்டறியப்படும்போது பறிகொடுக்க நேரிடுகிறது.

இதுபற்றி பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை. இந்தியாவில், பெரிய பிராண்ட் பெயர்களில் போலியான பொருள்கள் விற்பனை மிகவும் அதிகம். ஆனால், அவற்றை நமது உடைமைகளாக்கிக் கொண்டு அமெரிக்கா செல்லும்போது அது மிகப் பெரிய குற்றமாக மாறுகிறது ஏன்பதை முதல் முறையாக வெளிநாடு செல்வோர் அறிந்திருக்க வாய்ப்புக் குறைவுதான்.

எனவே, பிராண்டட் பெயரில் இருக்கும் பொருள்களை வாங்குவோர், அதன் போலிகளை அடையாளம் காண்பது எப்படி என்பதை அறிந்து கொண்டு பிறகு தெளிவாக உறுதியான பொருள்களை வாங்கிக் கொண்டு வெளிநாடு புறப்படுவதே சாலச் சிறந்தது. இல்லை யென்றால், வாங்கிய பிராண்டட் பொருள்களை போலியானவஜ் என்று தெரிய வந்தால், இந்தியாவிலேயே விட்டுவிட்டுச் செல்வது நல்ல யோசனையாக இருக்கலாம்.

கனடா முரசு

பக்கங்கள் 07

வெள்ளிக்கிழமை 21/06/2024

## கடுமையான வெப்பநிலை நிலவும் என எச்சரிக்கை!

கனடாவில் ஒன்றாரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் கடுமையான வெப்பநிலை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாகாணங்களி C2

# பத்தாவது தமிழர் தெருவிழா ஓகஸ்ட் 24, 25 திகதிகளில்!

## கனடியத் தமிழர் பேரவை அறிவிப்பு

**ஒன்ராரியோ, ஜுன் 21**
**கனடியத் தமிழர் பேரவையின் பத்தாவது தமிழர் தெருவிழா ஓகஸ்ட் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் நடைபெறும் என பேரவை அறிவித்துள்ளது.**
**இது தொடர்பாக கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் -**

'10 ஆவது ஆண்டு தமிழர் தெருவிழாவில் எங்களுடன் இணைந்து தமிழ் பாரம்பரியத்தின் ஒரு தசாப்தத்தை கொண்டாடுங்கள்.

ஓகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள 10 ஆவது ஆண்டு தமிழர் தெரு விழாவின்போது டொரோண்டோவில் உள்ள மார்க்கம் வீதி தமிழ் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாகவும் பிரம்மாண்டமான தெருத்திருவிழாவாகவும் காட்சியளிக்கும். ஒவ்வொரு ஆண்டும் இந்த தமிழர் தெருவிழா உலகெங்கிலும் செறிந்து வாழும் தமிழ்ச் சமூகத்தின் செழுமையான பாரம்பரியத்தினதும் ஆற்றல்மிக்க கலாச்சாரத்தினதும் சாட்சியாக அமையும்.

உலகின் மிகப்பெரிய வருடாந்த தமிழ் தெருத்திருவிழாவான தமிழர் தெருவிழா தமிழ் கலாச்சாரத்தை பாதுகாத்து மேம்படுத்தும் ஒரு முக்கிய தளமாகும். கடந்த ஆண்டு தமிழர் தெருவிழாவில் 275,000 பங்கேற்பாளர்கள் இணைந்து டொராண்டோவின் மிகச் சிறந்த கோடைகால நிகழ்வுகளில் ஒன்றாக இத்தெருத்திருவிழாவை உறுதிப்படுத்தினர். இந்த விழா தமிழ் பாரம்பரியத்தின் கலங்கரை விளக்கமாக மாறியுள்ளதோடு சமூக பிணைப்புகளை வளர்ப்பது, கலாச்சார பரிமாற்றம் மற்றும் வரலாற்று நினைவூட்டல் என்பவற்றிற்கான ஒரு வாய்ப்பாகவும் மாறியுள்ளது.

பாரம்பரிய இசை மற்றும் நடனம் முதல் பிரமிக்க வைக்கும் காட்சி கலைகள் வரை தமிழ் கலைகளின் ஆழத்திலும் அழகிலும் மூழ்குவதற்கு இந்த தெருவிழா ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தமிழர்களின் உணவு வகைகளின் பல்வேறு சுவைகளை இங்கு முயன்றுபார்க்க முடியும் என்பதோடு ஒவ்வொரு உணவும் தமிழ் மரபின் பாரம்பரியத்தின் கதையைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருக்கும். இந்தத் தமிழர் தெருவிழா அனைத்து வயதினருக்கும் ஓர் ஆழமான கலாச்சார அனுபவத்தை வழங்குவதோடு தமிழ் சமூகத்தின் பண்டைய மரபுகள் மற்றும் அவற்றின் நவீன வெளிப்பாடுகளைக் கொண்டாடுகிறது.

புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாறு மற்றும் தம்மை மீள்தகவமைத்துக்கொண்ட கதைகள் தமிழர் திருவிழாவில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. 'கனடாவிற்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் பயணம்' மற்றும் 'கருப்பு ஜூலை' போன்ற குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வுகளை வரும் தலைமுறையினருக்கு கடத்துவதற்கான காட்சிப்படுத்தல்கள் இவற்றில் முக்கியமானவை.

நூற்றுக்கணக்கான அர்ப்பணிப்புள்ள தன்னார்வத் தொண்டர்கள் தமிழர் திருவிழாவில் ஒவ்வொரு ஆண்டும் இணைந்துகொள்வதோடு கடந்த பத்து ஆண்டுகளில் தமிழர் தெருவிழா 100 க்கும் மேற்பட்ட புதிய வணிகங்களை அறிமுகப்படுத்தியுள்ளதோடு, பலதரப்பட்ட கலைஞர்களை அறிமுகப்படுத்தவும், புதுமையான உணவுகளை சந்தைப்படுத்தவும் உதவியாக இருந்து வருகின்றது.

தமிழர் திருவிழாவில் இலங்கை, தமிழ்நாடு மற்றும் உலகெங்கிலும் இருந்து மதிப்புமிக்க விருந்தினர்கள் கலந்துகொள்வதுண்டு. ஜஸ்டின் ட்ரூடோ, பியர் பொய்லிவ்ரே, ஜான் டோரி மற்றும் ஒலிவியா சோவ் போன்ற




முக்கிய பிரமுகர்கள் உட்பட கனடிய அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள அதிகாரிகள் இந்த தமிழர் திருவிழாவில் கலந்து சிறப்பித்துள்ளனர் என்பது இந்த கொண்டாட்டத்தின் தேசிய முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்த ஆண்டு தமிழர் தெருவிழா இலங்கையின் போரினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் நிலையான திட்டங்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தவுள்ளது. இது உலக சந்தையில் அவர்கள் காலூன்ற உதவியாக இருக்கும் என நம்பப்படுகின்றது.

உங்கள் நாட்காட்டிகளில் ஓகஸ்ட் 24 மற்றும் 25, 2024 ஆம் திகதியை குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மறக்க முடியாத கொண்டாட்டத்திற்கு, மெக்நிக்கோல் எவனியு மற்றும் பாஸ்மோர் எவனியு இடையே உள்ள மாரக்கம் சாலையில் தமிழர் தெருத்திருவிழாவில் இணைந்து கொள்ளுங்கள். தமிழர்களின் துடிப்பான கலாச்சாரத்தை தழுவி, எங்கள் சுவையான உணவு வகைகளை ருசித்து, ஒரு நிலையான எதிர்காலத்தை எதிர்பார்த்து அதன் வளமான வரலாற்றைப் போற்றும் சமூகத்தின் ஒரு பகுதியாக இணைந்துகொள்ளுங்கள்.' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






# ஈரானில் இருக்கும் கனடியர்களை நாடு திரும்புமாறு அரசு அறிவிப்பு!

ஒன்ராரியோ, ஜூன் 21

ஈரானில் உள்ள கனடியர்களை நாடு திரும்புமாறு கனடிய மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர படையை அண்மையில் கனடிய அரசாங்கம் பயங்கரவாதக் குழுவாகப் பட்டியலிட்டது. கனடிய அரசின் இந்த முடிவை ஈரான் கண்டித்துள்ளது.

கனடிய அரசின் முடிவை 'விவேகமற்ற, வழக்கத்திற்கு மாறான அரசியல் உந்துதல் நடவடிக்கை' என ஈரானிய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

கனடாவின் இந்த நடவடிக்கை எந்த விளைவையும் ஏற்படுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடிய அரசின் முடிவு, கனடாவில் உள்ள ஈரானிய சமூகத்தின் உறுப்பினர்களுக்கும், ஈரானில் உள்ள அவர்களது குடும்பத்தினருக்கும் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஈரான் அரசின் பழிவாங்கும் செயல்களைத் தவிர்க்க ஈரானில் உள்ள கனடியர்களை நாடு திரும்புமாறு கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜோலி வலியுறுத்தியுள்ளார்.

ஈரானில் உள்ள கனடியர்களை நாடு திரும்புமாறும், ஈரான் செல்ல திட்டமிட்டுள்ள கனடியர்கள் அந்தத் திட்டத்தை கைவிடுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானுக்கான புதிய பயண ஆலோசனை எச்சரிக்கையை ஜூன் 19ஆம் திகதி கனடா வெளியிட்டது.

வெளிநாடுகளில் உள்ள கனடியர்களின் பதிவு சேவையின்படி, 1,600க்கும் மேற்பட்ட கனடியர்கள் ஈரானில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பதிவு தன்னார்வமாக இருப்பதால், இந்த எண்ணிக்கை அங்குள்ள கனடியர்களின் உண்மையான எண்ணிக்கையை குறைத்து மதிப்பிடக் கூடும் என கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2012இல் ஈரானுடனான இராஜதந்திர உறவுகளை கனடா துண்டித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## கடுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் கடுமையான வெப்பநிலை நிலவும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் மத்திய மற்றும் தென் பகுதிகளிலும் கியூபெக்கின் தென்பகுதிகளிலும் கரையோர பிராந்தியங்களிலும் வெப்பநிலை 30 முதல் 35 பாகை செல்சியஸ் அளவில் காணப்படும் எனவும் ஈரப்பதனின் தன்மையில் ஏற்படும் மாற்றம் காரணமாக 40 பாகை செல்சியஸ் அளவிலான வெப்பத்தை உணர நேரிடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினமும் நாளையும் கடுமையான வெப்பநிலை நீடிக்கும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



# சால்மன் மீன் பண்ணைகளுக்குத் தடையா? 6,000 வேலைவாய்ப்புகளை இழக்க நேரும்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூன் 21

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் குறைந்து வரும் பசிபிக் சால்மன் மீன்களின் எண்ணிக்கையைப் பாதுகாக்க உதவும் பொருட்டு முக்கிய முடிவொன்று எடுக்கப்பட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் அடுத்த 5 ஆண்டுகளில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கடலுக்குள் கூண்டு அல்லது வலை ஊடாக முன்னெடுக்கப்படும் சால்மன் பண்ணைகளைத் தடை செய்ய இருப்பதாக சமஷ்டி அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த முடிவைச் சுற்றுச்சூழல் குழுக்கள் வரவேற்றாலும் மீன் வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுவோர் அதனை எதிர்க்கின்றனர்.

சால்மன் மீன், கனடாவின் மேற்கு கடற்கரையில் கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இனமாகும்.

ஆனால் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள 9,000 தனித்துவமான இனங்களில் பாதிக்கும் மேற்பட்டவை வீழ்ச்சியடைந்த நிலையில் உள்ளன என ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் டசின் கணக்கான கூண்டு அல்லது வலைக்குள் வளர்க்கப்படும் சால்மன் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இதன் காரணமாக காட்டு மீன்களுக்கு நோய் பரவும் ஆபத்து இருப்பதாக ஆர்வலர்களால் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, 2019ல் இதுபோன்ற பண்ணைகளை 2025க்குள் தடை செய்யப்படும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியிருந்தார். ஆனால் தற்போது 2029 மத்தியில் மொத்தமாக தடை செய்யப்படும் என்பதை ட்ரூடோ அரசாங்கம் அறிவித்துள்ளது.

சால்மன் பண்ணைகளைத் தடை செய்வதால் மொத்தமாக 6,000 பேரின் வேலை வாய்ப்புகள் பாதிப்புக்கு உள்ளாகும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

அது மட்டுமின்றி, ஆண்டுக்கு 1.2 பில்லியன் கனேடிய டொலர் திரட்டப்பட்டு வந்த இந்த வணிகம் இனி தடை செய்யப்படுவதால், மாகாண பொருளாதாரத்தை அது பாதிக்கும் என்றும் கூறப்படுகிறது.

மேலும், இதுபோன்ற பண்ணைகளை பூர்வகுடி மக்கள் மற்றும் கடற்கரையில் வாழும் சமூக மக்களே தொழில் ரீதியாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஜூலை இறுதிக்குள் சால்மன் மீன் வளர்ப்பு மாற்றம் எதிர்கால திட்டத்தை வெளியிட அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உலகளாவிய மீன் வளர்ப்பில் பிரிட்டிஷ் கொலம்பியாவை 'முன்மாதிரியாக' மாற்றுவதே இலக்காக இருப்பதால், திறந்த வலை சால்மன் பண்ணையை தடைசெய்வதில் நாட்டின் 'கடுமையான விதிகள்' அவசியம் என்று மத்திய மீன்வளத்துறை அமைச்சர் டயான் லெபௌதிலியர் கூறுகிறார்.

வான்கூவரில் சால்மன் மறுசீரமைப்பு குறித்த ஒரு தனி நிதி அறிவிப்பின் போது, தொழில்துறை அமைச்சர் பிராங்கோயிஸ்-பிலிப் ஷாம்பெயின் பிரிட்டிஷ் கொலம்பியா நிலுவையில் உள்ள ஓப்பன்-நெட் பண்ணை தடையால் பாதிக்கப்பட்ட பூர்வீகக் குடிகள் பிரிவினரை விரைவில் சந்திக்க உள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

திறந்த நிகர விவசாயத்திலிருந்து மாறுவதற்கு மத்திய அரசு பணம் வருகிறதா என்று கேட்டபோது, சமூகங்கள் மற்றும் மீன்வளர்ப்புத் தொழிலை எதிர்காலத்தை நோக்கி நகர்த்துவதற்கு உதவுவதற்கான வேலைகள் உள்ளன என அவர் பதிலளித்துள்ளார்.

2029 ஆம் ஆண்டுக்குள் மீன்வளர்ப்பு நிலத்திற்குச் செல்ல வேண்டும் என்றும், சமூகங்கள் மற்றும் வணிகங்களுக்கு அசல் காலக்கெடுவிலிருந்து ஐந்து ஆண்டுகள் திறந்த-நிகர விவசாயத்திலிருந்து மாற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பல பிரிட்டிஷ் கொலம்பிய கடலோரப் பூர்வீகக் குடிப் பிரிவினர் இந்த அறிவிப்பு தொடர்பில் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளமையுடன், சால்மன் மீன் வளர்ப்பிற்கு தொழில்துறை மாறுவதற்கு ஐந்து ஆண்டுகள் போதாது எனவும் கூறியுள்ளனர்.





# வெளிநாட்டு தலையீட்டைத் தடுக்கும் சட்டம் செனட்டிலும் நிறைவேறியது!

ஒன்ராரியோ, ஜூன் 21

வெளிநாட்டு தலையீட்டைத் தடுக்கவும், விசாரணை செய்யவும் மற்றும் தண்டிக்கவும் உதவும் சட்ட மூலத்தினை செனட் சபை நிறை வேற்றியுள்ளது.

ஏற்கனவே திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட இந்த சட்டமூலம் செனட் சபை யின் அனுமதிக்காக அனுப்பி வைக் கப்பட்டிருந்தது.

செனட்டர்கள் புதன்கிழமை பிற் பகுதியில் சட்டத்தை அங்கீகரித்த பின்னர், அப்பாவி மக்கள் அதன் வலையில் சிக்கிவிடாமல் இருப்பதை உறுதிசெய்யும் நோக்கில் முன்மொ ழியப்பட்ட திருத்தத்திற்கும் வாக்க ளித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழுவின் சமீபத்திய அறிக்கை, வெளி நாட்டு அரசுகள் அதிநவீன மற்றும் பரவலான தலையீட்டில் ஈடுபடு கின்றன எனவும், குறிப்பாக தேர் தலுக்கு முன்பும், தேர்தலின் போதும், பின்பும் கனடாவின் ஜனநாயக செயல் முறைகளை குறிவைக்கின்றன எனவும் சுட்டிக்காட்டியிருந்தன.

சீனாவும் இந்தியாவும் மிகவும் முக்கியமான குற்றவாளிகள் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சி-70 என அழைக்கப்படும் இந்த மத்திய அரசின் சட்டமூலம், ஜனநாயக செயல்முறைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஏமாற்றும் அல்லது மறைமுகமான செயல்களுக்கு இலக்கு வெளிநாட்டு குறுக்கீட்டு குற் றங்களை கையாள்குகிறது.

# ஹான் டோங்கின் மீதான குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த போதிய ஆதாரங்கள் இல்லை!

## அவரின் வழக்கை ஏற்று நீதிபதி தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 21

கடந்த ஆண்டு குளோபல் நியூஸ் அறிக்கைகள் தொடரில், முன்னாள் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹான் டோங்கிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஆதரிப் பதற்கான ஆவணப்படுத்தப்பட்ட ஆதாரம் எதுவும் ஒன்ராறியோ உயர் நீதிமன்ற நீதிபதிக்கு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

செய்தி நிறுவனத்திற்கு எதிரான டோங்கின் வழக்கை இரத்துச் செய்ய கோரி கோரஸ் என்டர்டெயின்மென்ட்டினால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை நிராகரித்தபோது நீதிபதி இந்த கருத்தைத் தெரிவித்ததுடன், வழக்கை விசாரிப்பது பொது நலன் என்றும் கூறியுள்ளார்.

'சீனர்களுடன் திரு. டோங்கின் தகவல்தொடர்பு விவ காரம் திறந்த நீதிமன்ற அமைப்பின் கருத்து சுதந்திரத்திற்கு தகுதியானது' என்று நீதிபதி பால் பெரெல தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் குளோபல் அறிக்கை அடையாளம் தெரியாத ஆதாரங்களை மேற்கோள் காட்டி, சீனாவில் தன்னிச்சையாகக் காவலில் வைக்கப் பட்டிருக்கும் கனடியர்களான மைக்கேல் ஸ்பாவர் மற்றும் மைக்கேல் கோவ்ரிக் ஆகியோரை விடுவிப்பதை நிறுத்தி வைக்குமாறு மூத்த சீன இராஜதந்திரிக்கு டோங் தனிப்பட்ட




முறையில் ஆலோசனை வழங்கினார் என அறிக்கை யிட்டிருந்தது.

இதன் விளைவாக, டாங்கின் நற்பெயரும் அரசியலில் வாழ்க்கையும் அழிக்கப்பட்டன என பெரல் தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

டோங் மார்ச் 2023 இல் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிலிருந்து வெளியேறி ஒரு சுயேச்சை உறுப்பினராக மாறினார்.

# ஸ்கார்பரோ கில்ட்வூட் தொகுதியில் ஜோன் மெக்கே இனிபோட்டியிடார்



ஒன்ராரியோ, ஜூன் 21

1997 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வரும் ஜோன் மெக்கே, தான் மீண்டும் பதவிக்கு போட்டியிட மாட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

ஸ்கார்பரோ-கில்ட்வூட் தேர்தல் தொகுதியில் கடந்த ஒன்பது நாடாளுமன்றத் தேர்தல்களில் தனது இடத்தை வென்றார்.

ஜோன் கிரேடியென் பிரதமராக இருந்தபோது முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட மெக்கே, போல் மார்ட்டின் மற்றும் ஜஸ்டின் ட்ரூடோ ஆகிய இருவரின் அரசாங்கங்களிலும் நாடாளுமன்ற செயலாளராக பணியாற்றியுள்ளார்.

மெக்கே ஒருபோதும் அமைச்சரவையில் பணியாற்றவில்லை, ஆனால் அவர் நாடாளுமன்றத்தில் இருந்த காலத்தில் சட்டமாக மாறிய இரண்டு தனிப்பட்ட உறுப்பினர் மசோதாக்களை அறிமுகப்படுத்தினார்.

2008 இல் சட்டமாக மாறிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி பொறுப்புக்கூறல் சட்டம், கனேடிய அபிவிருத்தி உதவியானது வறுமைக் குறைப்பில் கவனம் செலுத்துவதை உறுதி செய்தது. அவர் அபாயகரமான பொருள்கள் சட்டத்தில் ஒரு திருத்தத்தை அறிமுகப்படுத்தினார், இது எரியக்கூடிய தரநிலைகளை பூர்த்தி செய்யாத சிகரெட்டுகளை தடைசெய்து 2004 இல் சட்டமாக மாற்றியது.



# மொன்ட்ரியலிலும் சூழலிலும் மின்னல், இடிமுழக்கம் நேரும்

கனடாவின் மொன்ட்ரியல் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் கடுமையான மின்னல் தாக்கம், இடி முழக்கம் தொடர்பில் கனேடிய சுற்றாடல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பகுதிகளில் கடந்த மூன்று நாடள்களாக கடுமையான வெப்ப நிலை நீடித்து வருகிறது.

இந்த நிலையில், நேற்றைய தினம் கடும் மழையுடன் இடி மின்னல் தாக்கமும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதனையடுத்து, மொன்ட்ரியல், லாவல், வாடுரில், வெலிபீல்ட் மற்றும் தென்கியூபெக் ஆகிய பகுதிகளிலும் இடி மின்னல் தாக்கம் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இடி மின்னல் தாக்கங்களின் போது பலத்த காற்று வீசும் எனவும் ஆலங்கட்டி மழை பெய்யக்கூடிய வாய்ப்பு உண்டு எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சில இடங்களில் திடீரென வெள்ளம் ஏற்படக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# அடுத்த கல்வியாண்டு முடிவதற்குள் தேசிய பாடசாலை உணவுத் திட்டம்

## ஆரம்பித்து நடைமுறைப்படுத்த மத்திய அரசு வியூகம்



ஒன்ராரியோ, ஜூன் 21

அடுத்த கல்வியாண்டு முடிவதற்குள், உலகளாவிய, தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தை ஆரம்பிக்க மத்திய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

ஆனால் நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை அளவிடுவதற்கு நேரம் எடுக்கும் என்று குடும்ப அமைச்சர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

லிபரல் அரசாங்கத்தின் 2021 தேர்தல் பிரச்சாரத்தின் போது உறுதியளித்த திட்டத்திற்காக ஐந்து ஆண்டுகளில் 1 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தினப்பராமரிப்பு செலவைக் குறைப்பதற்காக மாகாணங்கள், பிரதேசங்கள் மற்றும் பழங்குடியின சமூகங்களுடன் அரசாங்கம் கையெழுத்திட்ட குழந்தை பராமரிப்பு ஒப்பந்தங்களைப் போன்றே இந்த ஒப்பந்தங்கள் இருக்கும் என்று குடும்ப அமைச்சர் ஜென்னா சுட்ஸ் தெரிவித்துள்ளார்.

'நாங்கள் இந்த ஒப்பந்தங்களை பேச்சுவார்த்தை நடத்துவோம், இந்த ஒப்பந்தங்களில் எங்கள் தொலைநோக்கு மற்றும் எங்கள் கொள்கைகளை இணைத்து, முன்னோக்கி நகர்த்துவது மாகாணங்களுக்கு பொறுப்பாகும்' என்று அவர் கூறியுள்ளார்.

பாடசாலை உணவுத் திட்டம் பெரும்பாலும் ஏற்கனவே குழந்தைகளுக்கு உணவளிக்கும் நிறுவனங்களை நம்பியிருக்கும் என்பதுடன் மேலதிமாக 400,000 குழந்தைகளுக்கு உணவை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நோர்த் யோர்க்கில் 2 பேரை சுட்டுக்கொன்று தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்த நபர்

## ஏமாற்றத்தின் உச்சியில் விரக்தியில் அப்படி நடந்து கொண்டாராம்

கனடாவின் நோர்த் யோர்க் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்திருந்தனர்.

இந்த சம்பவத்தில் நபர் ஒருவர் இரண்டு பேரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

இந்த இரட்டைக் கொலை மற்றும் தற்கொலைச் சம்பவங்களின் பின்னணி குறித்து கொலையாளி என சந்தேகிக்கப்படும் நபரின் மனைவி வாக்குமூலம் ஒன்றை அடித்துள்ளார்.

தமது கணவர் கொடிய மனிதர் அல்லர் எனவும், ஏமாற்றத்தின் காரணமாக ஏற்பட்ட விரக்தியே இந்த கொலைகளுக்கான காரணம் எனவும்



தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலமாக தமது கணவர் ஏமாற்றப்பட்டு வந்தார் எனவும், இதனால் மன அழுத்தமடைந்து இவ்வாறு படுகொலை செய்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களது குடும்பத்தினர் சேமித்து வைத்திருந்த பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டதாக அவர் குறிப்பிடுகின்றார். இந்தச் சம்பவத்தில் 54 வயதான ஆராஷ் மிஸாகி, 44 வயதான சமீரா யூசுப்பி ஆகிய இருவர் கொல்லப்பட்டனர்.

மேலும், 46 வயதான எலன் கார்ட்ஸ் என்பவர் தற்கொலை செய்து கொண்டிருந்தார்.

யாருடைய உயிரையும் பறிப்பதற்கு உரிமை அற்றவர்கள் என்ற போதும் மிகவும் மன விரக்தி காரணமாக இந்த தீர்மானத்தை அவர் எடுத்திருக்கின்றார் என எலனின் மனைவி தெரிவித்துள்ளார்.

அடகு கடன் தொடர்பில் இடம்பெற்ற 1.28 மில்லியன் டொலர் மோசடி சம்பவத்தின் பாதிக்கப்பட்டவர்களில் எலனின் குடும்பமும் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகிறது.

# டொரன்டோ போக்குவரத்து சபையின் பிரதம நிர்வாக அதிகாரி பதவி விலகல்



ஒன்ராரியோ, ஜூன் 21

டொரன்டோ போக்குவரத்து சபையின் தலைமை நிர்வாக அதிகாரி பதவி விலகவுள்ளார் என அறிவித்துள்ளார்.

கோடை கால இறுதியில் தனது பதவியில் இருந்து விலகுகிறார் என சபையின் தலைமை நிர்வாக அதிகாரி ரிக் லியரி தெரிவித்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்து விட்டார் என நேற்று (ஜூன் 20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் லியரி குறிப்பிட்டுள்ளார்.

இந்த பதவி விலகல் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து லியரியின் பதவி விலகல் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

இந்த நிலையில் இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி யார் என்பது தொடர்பில் விரைவில் அறிவிப்பு வெளியாகும் என போக்குவரத்துச் சபையின் தலைவர் ஜமால் மையர்ஸ் கூறியுள்ளார்.

# விசிட்டர் விசாவில் கனடா வந்தவருக்கு கல்வி அனுமதி வழங்கப்பட்டது எப்படி?

## சமூக ஊடகப் பிரிவு கிளப்பியுள்ள புதிய சர்ச்சை




விசிட்டர் விசாவில் கனடா வந்த விசிட்டர் விசாவில் கனடா வந்த 50 வயது நபர் ஒருவருக்கு கல்வி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவரே கூறும் வீடியோ ஒன்று கடும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இந்திய வம்சாவளியினர் ஒருவர், தான் கனடாவுக்கு விசிட்டர் விசாவில் வந்தார் எனவும், பின்னர் தனக்கு கல்வி அனுமதி கிடைத்ததாகவும் கூறும் வீடியோ ஒன்று சமூக ஊடகம் ஒன்றில் வெளியாகியுள்ளது.

அந்த வீடியோவில், 'என் பெயர் பிரதீக் பாய் காத்வா' எனத் தன்னை அறிமுகம் செய்துகொள்ளும் அந்த நபர், தான் விசிட்டர் விசாவில் கனடாவுக்கு வந்தார் எனவும், பின்னர் தனக்கு கல்வி அனுமதி கிடைக்க GOAT Consulting Inc என்னும் நிறுவனம் உதவியதாகவும் கூறுகிறார்.

இப்படி சுமார் 50 வயதுள்ள ஒருவருக்கு கல்வி விசா வழங்கப்பட்டதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து கடுங் கோபமடைந்த சமூக ஊடக பயனாளர்கள் பலர், கனடா புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப் பின்மீது முறைப்படி விசாரணை நடத்தப்படவேண்டும் எனக் கோரியுள்ளனர்.

தகுதியுடைய இளைஞர்கள் பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க மறுக்கும் புலம்பெயர்தல் அமைப்பு, 50 வயதுள்ள ஒருவருக்கு கல்வி விசா வழங்கியது எப்படி என சிலர் கொந்தளித்துள்ளனர்.

சிலரோ விசிட்டர் விசாவில் வந்தவருக்கு கல்வி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது எப்படி சாத்தியம் எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். ஆக மொத்தத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளார் பிரதீக் பாய் காத்வா. அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!



# மரணமடைவோர் எண்ணிக்கை கனடாவில் வெப்பத்தால் உயர்வு

கனடாவில் வெப்பம் காரணமாக மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளிவிவரவியல் திணைக்களம் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடுமையான வெப்பம் காரணமாக வயது முதிர்ந்தவர்கள் மரணிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட 12 நகரங்களில் வெப்பம் அதிகமாக காணப்படும் போது கூடுதல் மரணங்கள் பதிவாகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெப்பம் காரணமாக 65 வயதுக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீடுகள் அதிகளவில் வாடகைக்கு விடப்படும் நகரங்களில் வெப்பம் காரணமாக மரணங்கள் கூடுதலாகப் பதிவாகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெப்பநிலை கூடுதலான நாள்களில், ரொறன்ரோ மற்றும் மொன்றியலில் சுவாச உபாதைகளினால் முதியவர்கள் அதிகளவில் உயிரிழக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வான்கூவார், பிரிட்டிஷ் கொலம்பியா, சர்ரே போன்ற இடங்களில் அதிக வெப்பநிலைக்கு பழக்கப்படாதவர்கள் வெப்ப நிலை அதிகரிப்பினால் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.